OS.No. 1/2025

Date : 04.11.2025

Witness Name & Rank – ரத்தினம்மாள் - PW1

சாட்சி அழைக்கப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. நான் எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் பல்லடம் வடுகபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சொத்து இருக்கும் எனது வீட்டிற்கும் ஒரு பத்து கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். எனக்கு என்ன வயதாகிறது என்றால் 65 வயது ஆகிறது. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு மகன்கள் ஒரு மகள் உள்ளார். எனது குழந்தைகள் அனைவரும் படித்தவர்கள் என்றால் அனைவரும் பத்தாம் வகுப்பு வரை படித்தவர்கள். வழக்கு சொத்து வாங்கப்பட்டு 59 ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான். மேற்படி சொத்து வாங்கப்பட்டபோது எனக்கு ஐந்து வயது இருக்கும் என்றால் சரிதான்.
2. எனது தந்தை ஒரு சொத்தை விற்ற பணத்தில் இந்த இடத்தை வாங்கியதாக சொல்லி உள்ள நிலையில் மேற்படி விற்கப்பட்டதாக சொல்லப்படும் இடத்தின் காலை எண் எதுவும் தெரியுமா என்றால் அது எல்லாம் எனக்கு தெரியாது. எவ்வளவு விஸ்தீரனை சொத்து விக்கப்பட்டது யாருக்கு விற்பனை செய்யப்பட்டது என்ன விலைக்கு விற்கப்பட்டது என்று குறிப்பிட்ட தெரியாது என்றால் சரிதான்அவ்வாறு விற்கப்பட்டதாக சொல்லப்படும் பூமி தற்சமயம் யார் அனுபவத்தில் உள்ளது என்று குறிப்பிட்டு தெரியாது என்றால் சரிதான். எனது தந்தை முத்துச்சாமி கவுண்டர் பேரில் எந்த சொத்துக்களும் இல்லை எனவே நான் 59 ஆண்டுகளுக்கு முன்பு எனது தந்தை அந்த சொத்தை விற்றதாக சொல்லி உள்ளது வழக்கிற்காக முன்னிறுத்தப்பட்டுள்ள தவறான சங்கதி என்றால் சரியல்ல. எனவே தான் அந்த விற்பனை செய்யப்பட்டதாக சொல்லப்படும் சொத்து பற்றி எந்த விதமான விவரமும் தெரியவில்லை என்றால் சரியல்ல
3. எனது அப்பா இருந்தவரை நான் இந்த வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் எனது தந்தை இருந்தவரை நாங்கள் அனைவரும் சொத்தை ஒரு சேர

அனுபவித்து வந்தோம் அதனால் பிரச்சனைகளுக்குள் இல்லை. நான் எந்த ஒரு காலத்திலும் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இல்லை எனது அம்மா மட்டும் தான் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. எனது அம்மாவுடன் எனக்கு சமூக உறவு இருந்ததா என்றால் ஆமாம். எனக்கு நல்ல முறையில் சீர் செய்து தான் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் அனைவரும் செய்வது போல் தான் திருமணம் செய்து வைத்தார்கள்எனது அம்மா மேற்படி வழக்கு சொத்தை சந்திர முரளி யோகேஸ்வரனுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் எனது தம்பி மறைந்த பிறகு நான் சென்று மேற்படி சொத்தில் பாகம் கேட்டேன் அப்போது எழுதி வைத்ததாக சொன்னார்கள்.

4. மேற்படி செட்டில்மென்ட் ஆவணம் எழுதப்பட்ட போது எனக்கு தெரியும் என்றால் இல்லை நான் பாகம் கேட்டேன் அப்போது சொன்னார்கள் நான் வந்து வழக்கு போட்டு விட்டேன்2022 காலத்தில் நான் இந்த வழக்கு சொத்தில் ஒரு ஏக்கர் நிலத்தை வாங்கிய திருவருள் செல்வி மற்றும் அரசாங்க தரப்பினரை தரப்பினர்களாக சேர்க்க சொல்லி மனு தாக்கல் செய்து அதன் பிறகு அந்த மனுவை திரும்ப பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். எனது அண்ணன் மகன்களான மூன்று மற்றும் நான்கு பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் தற்போது கோழிப்பண்ணை கிணறு வைத்து பண்ணையம் செய்து வருகிறார்கள் என்றால் நான் அனைவரும் கூட்டாக இருந்த போது மேற்படி கோழி பண்ணை, கிணறு எல்லாம் இருந்தது. ஐந்தாம் பிரதிவாதி திருவருட்செல்வி தான் வாங்கிய இடத்தில் கம்பி வேலி அமைத்து மானவரி விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 2020ல் திருவருட்செல்வி கிரயம் வாங்கியது எனக்கு தெரியும் என்றால் இல்லை சிறிது காலம் கழித்து தான் எனக்கு தெரியும்.

5. எனது அம்மா எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய சொல்லி நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். நான் சென்று எனது அம்மாவிடம் பாகம் கேட்டபோது அவர் ஒத்துவராமல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்து எவ்வளவு காலம் கழித்து எனது தாயார் காலமானார் என்றால் நான்கு ஆண்டுகள் கழித்து காலமானார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதப்பட்ட பிறகு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் நான் பாகம் கேட்டேன்

தரவில்லை வழக்கு தாக்கல் செய்து விட்டேன். நான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்ததாக நாளிதழ் விளம்பரம் செய்யவில்லை என்றால் சரிதான்.மேற்படி ஐந்தாம் பிரதிவாதி 3 மற்றும் 4ம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் அவர் சட்டப்படியான கிரையதாரர் ஆவார் மேலும் அவர் கிரயம் பெற்று தனிப்பட்ட சுவாதீனத்தில் விவசாயம் செய்து வருகிறார் எனவே அவரது கிரயத்தை பொறுத்து எந்த விதமான உத்தரவு அவருக்கு பாதகமாக உத்தரவிட முடியாது என்றால் சரியல்ல

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---